2019 ஜனவரி 7]

பகுதிகளையெல்லாம் ஆய்வு செய்து, அதன் அடிப்படையிலேதான் புதிய கல்லூரிகள் தோற்றுவிக்கப்பட்டிருக்கின்றன. அதேபோல், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற பகுதியிலே வரும் காலங்களில் மாணவர்களுடைய சேர்க்கைக்காக விண்ணப்பங்கள் அதிக அளவிலே இருக்குமேயானால் அதை மாண்புமிகு அம்மா அவர்களின் வழித்தொடரும் அரசானது பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 24, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) பூங்கோதை, மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

24—

நியாயவிலைக் கடை

***27443—டாக்டர் (திருமதி) பூங்கோதை:**

மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலங்குளம் தொகுதி, கீழப்பாவூர் ஒன்றியம், அருணாபேரி கிராமத்தில் நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருநெல்வேலி மாவட்டம், ஆலங்குளம் வட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், அருணாபேரியில் தற்போது பகுதிநேர நியாய விலைக் கடை ஒன்று 182 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்பகுதிநேர நியாய விலைக் கடை அருகிலுள்ள நாகல்குளம் தாய்க்கடையிலிருந்து பிரிக்கப்பட்டு செயல்படுகிறது என்பதனையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) பூங்கோதை அவர்கள்.*

டாக்டர் (திருமதி) பூங்கோதை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு, ‘முழுநேரக் கடை’ என்று அந்தக் கேள்வியைத் திருத்திக்கொள்ளுமாறு பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன். இதற்கு என்ன காரணமென்றால், அருணாபேரியில் 2 கிராமங்கள் உள்ளன. ஒன்று அருணாபேரி; இன்னொன்று வடக்கு சிவகாமியபுரம். வடக்கு சிவகாமியபுரம், கீழப்பாவூர் பேரூராட்சியோடு ஒன்றியிருக்கிறது. அருணாபேரி, பெத்தநாடார்பட்டி ஊராட்சியோடு இருக்கிறது. 2 கிராமங்களில், ஒன்று ஊராட்சியோடு இருக்கிறது, இன்னொன்று பேரூராட்சியோடு இருக்கிறது. ஆனால் இரண்டுமே ஒரே தெருவில்தான் இருக்கின்றன. இந்த இரண்டு கிராமங்களும் ஒருங்கிணைந்தால் கிட்டத்தட்ட 400 குடும்ப அட்டைகள் கிடைக்கும். ஏனென்றால், அங்கே சென்றவுடனே, வடக்கே சிவகாமியபுரம் ஆட்கள், நாங்கள் கிட்டத்தட்ட 1½ கிலோ மீட்டர் தூரம் சிவகாமியபுரத்திற்கு செல்ல வேண்டியிருக்கிறது; எங்கள் இரண்டு கிராமங்களையும் ஒருங்கிணைத்து ஒரு முழுநேரக் கடையை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டேயிருக்கின்றார்கள். அதைத் தாங்கள் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

முற்பகல் 10–30

அதேபோல, மற்றொரு கோரிக்கை. இப்பொழுது அந்தக் கடை தற்காலிகமாக ஒரு கோயில் கட்டடத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றது. இப்பொழுது எங்கெல்லாம் நிறைய ரேஷன் கடைகள் இருக்கின்றனவோ, அநேக இடங்களில் சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கடைகளைக் கட்டித் தருகின்றோம். நாங்கள், மாவட்ட ஆட்சியரிடமோ, Project Officer–ரிடமோ சென்று கேட்டால், இதற்கு சிறப்பு நிதி கிடையாது என்று கூறுகின்றார்கள். சமுதாய நலக் கூடங்கள், அங்கன்வாடி மையங்கள் கட்டுவதற்கெல்லாம் சிறப்பு நிதி இருக்கின்றபோது, ரேஷன் கடைகள் கட்டுவதற்கும் சிறப்பு நிதி அளித்திட வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

2019 ஜனவரி 7]

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடைமுறையில் உள்ள விதிகளின்படி, ஊரகப் பகுதிகளில் புதிய நியாய விலைக் கடை, அதாவது முழுநேரக் கடை அமைக்கப்பட வேண்டுமென்று சொன்னால், 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற அந்தப் பகுதிநேரக் கடையில் 182 குடும்ப அட்டைகள்தான் தற்போது இருக்கின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பக்கத்திலே இருக்கின்ற சிவகாமியபுரத்தையும் ஒன்றிணைத்து, ஒரு முழுநேரக் கடை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்கின்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசினால் பரிசீலித்து, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தக் கடையானது தற்பொழுது ஒரு கோயில் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது என்றும், அதற்கு* permanent *ஆக ஒரு கட்டடத்தைக் கட்டித் தர வேண்டுமென்ற கோரிக்கையையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்திருக்கிறார்கள். அதுபோன்ற இடங்களில் கட்டடங்களைக் கட்டித் தருவதற்கும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பல்வேறு வகைகளில் நிதியை வழங்கிக் கொண்டிருக்கிறது. அந்த அடிப்படையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) பூங்கோதை அவர்கள்.*

டாக்டர் (திருமதி) பூங்கோதை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். 5 ஏக்கர் நிலம், ஒரு இலட்சம் ரூபாய் ஆண்டு வருமானம்,* Professional Tax *செலுத்துபவர்கள்,* Government–*ல் பணிபுரிபவர்கள்,* retired *ஆனவர்கள், நான்கு சக்கர வாகனம் வைத்துள்ளவர்கள்,* Air Conditioner *வைத்துள்ளவர்கள், 3 அறை கொண்ட இல்லங்கள் வைத்துள்ளவர்கள் என்று பல* conditions *குறிப்பிடப்பட்டு, அவர்களுக்கெல்லாம் ரேஷன் கடையில் பொருட்கள் கிடையாது என்று கடந்த வாரம் ஓர் அறிக்கை வந்தது. செய்தித் தாளில் படித்ததுதான். கடந்த காலத்தில் மாண்புமிகு*

முன்னாள் முதல்வர் அம்மையார் அவர்கள், தமிழ்நாட்டிற்கு மட்டும் இதற்கு விதிவிலக்கு உண்டு என்று கூறியிருந்தார்கள். இதற்கென்று நாங்கள் 5,500 கோடி ரூபாய் நிதியொதுக்கீடு செய்துள்ளோம். Gazette–ல் normal ஆக அறிக்கையாகக் கொடுக்க வேண்டிய காரணத்திற்காகத்தான், வெறும் Gazette Notification தான். இதை நாங்கள் follow செய்ய மாட்டோம் என்று நீங்கள் கூறியதாக செய்தித் தாள்களில் படித்திருந்தேன். அது உண்மையா என்று அறிந்துகொள்ள விரும்புகின்றேன். ஏனென்றால், இன்றைய சூழ்நிலையில் ஒரு வருடத்திற்கு ஒரு இலட்சம் ரூபாய் வருமானம் என்பது ஒரு பெரிய தொகையே கிடையாது. எனவே, தயவு செய்து, ஏழையெளிய மக்கள் அனைவருக்கும் ரேஷன் கடையில் பொருட்கள் கிடைப்பதற்கு ஆவன செய்ய வேண்டும். 1972–ல் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தை உருவாக்கிய பெருமை எங்களுடைய தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களையே சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) இது ஏழை மக்களுக்காகக் கொண்டு வரப்பட்ட ஒரு திட்டம். தயவு கூர்ந்து யாரையும் விலக்காமல், யார் யாரெல்லாம் குடும்ப அட்டைகள் வைத்துள்ளார்களோ அவர்களுக்கு நுகர்பொருட்களை வழங்கிடுமாறு மிகுந்த பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கருத்தினை இங்கே வெளிப்படுத்தியிருக்கிறார்கள். நியாய விலைக் கடைகளைப் பொறுத்தவரையில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. உணவு மானியத்திற்கு மட்டும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு ஆண்டிற்கு ஆறாயிரம் கோடி ரூபாயை ஒதுக்குகிறது என்பதனை இந்த நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இது வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவில், தமிழகத்திலேதான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதிக மக்கள் தொகையைக் கொண்ட மாநிலங்களில்கூட ஆறாயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்படவில்லை. தமிழகத்தில் மட்டும்தான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசிலேதான் ஆறாயிரம் கோடி

2019 ஜனவரி 7]

ரூபாய் ஒதுக்கப்படுகிறது என்பதனையும், மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழியிலே ஆட்சி செய்து கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களும் தொடர்ந்து அந்த மானியத்தை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதனையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு சந்தேகத்தை கிளப்பினார்கள். அதாவது ஒரு இலட்சம் ரூபாய் ஆண்டு வருமானம், வாகனங்கள் வைத்திருப்பவர்கள் என்கின்ற அந்த விதிமுறைகள் அடிப்படையில் நுகர்பொருட்கள் கிடையாது என்பது பற்றி ஒரு சந்தேகத்தைக் கிளப்பினார்கள். அந்த சந்தேகத்தை பொறுத்தவரையில், அது நிச்சயமாக, உறுதியாக, தமிழகத்திற்குப் பொருந்தாது.

முற்பகல் 10–35

தமிழகத்தைப் பொறுத்தவரை, அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தினை நாம் செயல்படுத்தி வருகிறோம். தேசிய உணவு பாதுகாப்புத் திட்டத்தினைச் செயல்படுத்துகிறபொழுது, அதிலே சில விதிமுறைகள் இருக்கின்றன. அந்த விதிமுறைகளுக்குட்பட்டு, அதிலே சேருவதற்காக மட்டும்தான் அந்தக் கணக்கெடுப்பு. அதில் முன்னுரிமை, முன்னுரிமை அல்லாத குடும்ப அட்டைகள் என கணக்கெடுக்கப்பட்டதே தவிர, அதற்கும், ரேஷன் பொருட்களை வாங்குவதற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லையென்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், தமிழகத்தில் தேசிய உணவு பாதுகாப்புத் திட்டமும் செயல்படுத்தப்படுகிறது.

அதேபோல, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின் மிகப் பெரிய திட்டமான விலையில்லா அரிசி வழங்கும் திட்டமும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. அது தொடர்ந்து செயல்படுத்தப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 25, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி. இராஜேந்திரன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.